# இரண்டாம் பருவ இடைத்தேர்வு – 2022

வகுப்பு – 11 **விலங்கியல்** மதிப்பெண் : 50

காலம் : 1.30 மணி

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது.** 10 x 1 = 10

1. சிறுநீர் அடர்வு நெஃப்ரானின் எப்பகுதியைச் சார்ந்துள்ளது?
   அ) பௌமானின் கிண்ணம்
   ஆ) ஹென்லே வளைவின் நீளம்
   இ) அண்மை சுருண்ட நுண்குழல்
   ஈ) கிளாமருலஸிலிருந்து தோன்றும் இரத்த நுண்நாளத் தொகுப்பு
2. போடோசைட்டுகள் காணப்படுவது
   அ) பௌமானின் கிண்ண வெளிச்சுவரில் ஆ) பௌமானின் கிண்ண உட்சுவரில்
   இ) நெஃப்ரானின் கழுத்துப் பகுதியில் ஈ) கிளாமருலார் இரத்த நுண்நாளங்களின் சுவரில்
3. கீழ்க்கண்ட எப்பொருள் யூரிக் அமிலத்துடன் இணைந்து சிறுநீரகக்கற்களை உருவாக்குகிறது?
   அ) சிலிகேட்டுகள் ஆ) தாது உப்புகள்
   இ) கால்சியம் கார்பனேட் ஈ) கால்சியம் ஆக்சலேட்
4. எலும்புத் தசைகளை எலும்புகளோடு இணைப்பது?
   அ) தசை நாண்கள் ஆ) தசைநார் இ) பெக்டின் ஈ) ஃபைப்ரின்
5. தசை நார்களின் செயல்அலகு
   அ) சார்கோமியர் ஆ) கார்கோ பிளாசம் இ) மையோசின் ஈ) ஆக்டின்
6. முழங்கையின் கூர்மைபகுதி
   அ) ஏகுரோமியின் நீட்சி ஆ) கிளிநாய்டு குழி இ) ஒலிகிரனான் நீட்சி ஈ) இணைவு
7. கீழ்கண்டவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடு.
   அ) உணர்வு நரம்பு – உட்செல்லுதல்
   ஆ) இயக்க நரம்பு – உட்செல்லுதல்
   இ) உணர்வு நரம்பு – வயிற்றுப்புறம்
   ஈ) இயக்க நரம்பு – முதுகுப்புறம்
8. மனித மூளையின் எப்பகுதி உடல் வெப்பநிலை கட்டுப்பாட்டுடன் தொடர்புடையது?
   அ) சிறுமூளை ஆ) பெருமூளை இ) முகுளம் ஈ) ஹைப்போதலாமஸ்
9. மனித தண்டுவட நரம்புகளின் எண்ணிக்கை
   அ) 31 இணைகள் ஆ) 12 இணைகள் இ) 31 ஈ) 12
10. சைனோவியல் திரவம் காணப்படும் இடம்
    அ) மூளையின் வென்ட்ரிக்கிள்கள் ஆ) தண்டு வடம்
    ஆ) அசையா மூட்டுகள் ஈ) நன்கு அசையும் மூட்டுகள்

**II. எவையேனும் ஐந்தனுக்கு விடையளி. வினா எண். 17 கட்டாய வினா.** 5 x 2 = 10

11. சிறுநீர் உருவாதலின் முறைகள் யாவை?
12. யூரேமியாவின் பண்பினைக் கூறு.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

CamScanner

13. செவிச் சிற்றெலும்புகளின் பெயரைக் கூறு.
14. மூட்டு நழுவுதலுக்கான சிகிச்சை முறையினைக் கூறு.
15. அனிச்சைவில் என்றால் என்ன?
16. நியூரோ கிளியா செல்களின் பணிகளின் ஏதேனும் இரண்டைக் கூறு.
17. கார்டிகல் மற்றும் மெடுல்லரி நெஃப்ரான்களை வேறுபடுத்து.

**III. எவையேனும் ஐந்தினுக்கு விடையளி. வினா எண்.24 கட்டாய வினா** 5 x 3 = 15

18. நெஃப்ரானின் அமைப்பைப் படம் வரைந்து பாகம் குறி.
19. சிறுநீரகச் செயலிழப்பு என்பது யாது? அதன் வகைகளைக் கூறு.
20. இயன்மருத்துவம் பற்றிக் குறிப்பெழுது.
21. ஐசோடானிக் மற்றும் ஐசோமெட்ரிக் சுருக்கத்தினை வேறுபடுத்து.
22. தசைச் சுருக்கத்திற்கான சறுக்கு இழைக் கோட்பாட்டினை சுருக்கமாகக் கூறு.
23. லிம்பிக் மண்டலம் ஏன் உணர்ச்சி மூளை எனப்படுகிறது? அதன் பகுதிகளைக் கூறு.
24. ஒருவரின் கண் பரிசோதகர் அவருடைய கண் உள்ளழுத்தம் அதிகளவில் உள்ளதாகக் கூறுகிறார். இந்நிலையின் பெயரென்ன? அதன் விளைவு யாது? அதற்கு காரணமான திரவம் எது?

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளி** 3 x 5 = 15

25. குச்சி மற்றும் கூம்பு செல்களை வேறுபடுத்துக. (அல்லது)
நீண்டமைந்த மாதிரி எலும்பின் அமைப்பினை விவரி.
26. தொடர் உடற்பயிற்சியினால் ஏற்படும் நன்மைகள் யாவை? (அல்லது
சட்டக மண்டலத்தின் பணிகள் யாவை?
27. மனித சிறுநீரகத்தின் அமைப்பினை விவரி. (அல்லது)
நரம்பு மண்டலத்தின் அமைப்பு மற்றும் செயல் அலகு பற்றி விவாதி.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner